‘நலம் காக்கும் ஸ்டாலின்’ முகாம்: பொதுமக்கள் கலந்துகொள்ள முதல்வர் அழைப்பு!

முதல் பக்கத் தொடர்ச்சி

துறைகளை ஒருங்கிணைந்து தேர்ந்தெடுக்கப்பட்ட பள்ளி / கல்லூரி வளாகங்களில் இம்முகாம்கள் நடத்தப்பட உள்ளன.

பரிசோதனை விவரங்களை மக்கள் அறிந்து கொள்ளலாம்!

இம்முகாம்களில் இரத்த அழுத்த பரிசோதனை மற்றும் அனைத்துப் பயனாளிகளுக்கும் இரத்த மாதிரிகள் சேகரிக்கப்பட்டு, முழுமையான இரத்த அணுக்களின் எண்ணிக்கை, இரத்த சர்க்கரை, சிறுநீரகச் செயல்பாட்டு பரிசோதனைகள் (யூரியா, கிரயாட்டினின்) செய்யப்பட்டு, மருத்துவ முகாமிலேயே பயனாளிகளின் பரிசோதனை விவரங்கள் அவர்களுக்கு குறுஞ்செய்தி வாயிலாக உடனடியாக தெரிவிக்கப்படும்.

அனைத்துப் பயனாளிகளுக்கும் கண், காது, மூக்கு (ம) தொண்டை மற்றும் பல் மருத்துவச் சேவைகள் வழங்கப்படவுள்ளது. மேலும், பொது மருத்துவ நிபுணரின் அறிவுறுத்தலின்படி எக்ஸ்ரே (XRay), எக்கோகார்டியோகிராம் (Echocardiogram), அல்ட்ராசவுண்ட் ஸ்கேன் (USG) மற்றும் பெண்களுக்கான கர்ப்பப்பை வாய் (ம) மார்பக புற்றுநோய் கண்டறியும் பரிசோதனைகளும் செய்யப்பட உள்ளன.

முகாம்களில் வழங்கப்படும் மருத்துவ சேவைகள்!

இம்முகாமில் பங்குகொள்ளும் பயனாளர்களுக்குக் கீழ்க்கண்ட மருத்துச் சேவைகள் மற்றும் இந்திய மருத்துவம் சார்ந்த ஆலோசனைகள் சிறப்பு மருத்துவ நிபுணர்களைக் கொண்டு வழங்கப்பட உள்ளன.

- பொது மருத்துவம்,
- பொது அறுவை சிகிச்சை மருத்துவம்,
- இருதய மருத்துவம்,
- எலும்பியல் மருத்துவம்,
- நரம்பியல் மருத்துவம்,
- தோல் மருத்துவம்,
- காது, மூக்கு மற்றும் தொண்டை மருத்துவம்,
- மகப்பேறு மருத்துவம்,

- இயன்முறை மருத்துவம்,
- பல் மருத்துவம்,
- கண் மருத்துவம்,
- மனநல மருத்துவம்
- குழந்தைகள் நல மருத்துவம்
- நுரையீரல் மருத்துவம்
- நீரிழிவு நோய் மருத்துவம்
- கதிரியக்கவியல் மருத்துவம்

மேற்சொன்ன பரிசோதனைகள் மற்றும் மருத்துவச் சேவைகள் மட்டுமின்றி, முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டு திட்டத்தின்கீழ் பதிவு செய்தல் மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கான அரசு அங்கீகாரச் சான்றிதழ் இம்முகாமிலேயே வழங்கப்பட உள்ளன.

இம்முகாம்களின் விரிவான தரவுத் தொகுப்பு, தொடர் கண்காணிப்பு மற்றும் பின்தொடர் சிகிச்சை நடவடிக்கைகள், நவீன சுகாதார மேலாண்மைத் தகவல் முறைமை (HMIS 3.0) வாயிலாகக் கண்காணிக்கப்பட உள்ளன.

பொது மக்களுக்கு உயர்தர மருத்துவச் சேவை வழங்கப்படும்!

இரத்த அழுத்தம், சிறுநீரக செயல்பாடு, பெண்களுக்கான கருப்பை வாய்ப் புற்று (ம) மார்பக புற்றுநோய் ஆகியவற்றை கண்டறிதல் உள்ளிட்ட பல்வேறு சிறப்பு மருத்துவப் பரிசோதனைகள் மற்றும் மருத்துவச் சேவைகள் நவீன சுகாதார மேலாண்மைத் தகவல் முறைமை (HMIS 3.0) மூலம் கண்காணிக்கப்படும் இம்முழு உடல்பரிசோதனை முகாமானது பொதுமக்கள் வசிக்கும் பகுதிகளுக்கு அருகிலேயே வழங்கப்படுகின்றன. இதன் மூலமாக உயர்தரமான மருத்துவச் சேவைகள் பொதுமக்களுக்கு அவர்கள் வாழுமிடங்களுக்கு அருகிலேயே கிடைக்க இருக்கின்றன.

இந்த முகாமை அனைத்து பொதுமக்களும், குறிப்பாக “உங்களுடன் ஸ்டாலின்” முகாம்களில் நடத்தப்படும் முதற்கட்ட பரிசோதனையின் அடிப்படையில் மருத்துவ நிபுணர்களின் விரிவான பரிசோதனைக்கு பரிந்துரைக்கப்பட்டவர்கள் இந்த முகாமில் அவசியம் கலந்து கொண்டு பயனடைய வேண்டும் எனவும் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஆதிதிராவிடர், பழங்குடியினர் மாணவர்களுக்குப் பாராட்டுச் சான்றிதழ்!

முதல்வர் வழங்கினார்!... முதல் பக்கத் தொடர்ச்சி

அனைத்து கட்டணங்களையும் தமிழ்நாடு அரசே வழங்கி வருகிறது.

மாணவர்களுக்கு அரசு செய்யும் உதவிகள்!

மேலும், 12–ஆம் வகுப்பு பயிலும் மாணவர்களுக்கு நுழைவுத் தேர்வுக்கான சிறப்பு பயிற்சி வகுப்புகள் ஆன்–லைன் வாயிலாகவும், நேரடியாகவும் (Online / Offline) நடத்தப்படுவதோடு, நுழைவுத் தேர்வுக்கு தயார் செய்தல், நுழைவுத் தேர்வு மையத்திற்கு மாணவர்களை அழைத்துச் செல்லுதல், நுழைவுத் தேர்வுகளின் இறுதி முடிவுகள் வெளியான பின்னர் வெற்றி பெற்ற மாணவர்களை கலந்தாய்வில் (Counselling) பங்கேற்பதற்கு தயார் செய்தல், கல்லூரிகளில் பிடெக்., பி.இ., போன்ற பாடப் பிரிவுகளை தேர்ந்தெடுப்பதற்கு உளவியல் ரீதியாக மாணவர்களை தயார் செய்து, விருப்பமான துறையை தேர்ந்தெடுக்கவும் அரசு உதவுகிறது.

அத்துடன் புதிய முயற்சியாக CLAT மற்றும் CUET நுழைவுத் தேர்வுக்கு தேர்வு எழுதி வெற்றி பெற்ற மாணவர்களைக் கொண்டே பயிற்சியும் அளிக்கப்படுகிறது. மேலும், உயர்கல்வி நிறுவனங்களில் சேர்க்கைக்குப் பின்னரும் அக்கல்வி நிறுவனங்களின் தன்னார்வ வழிகாட்டுநர் (Mentorship) மூலமாக அரசு மாணவர்களை வழிநடத்தி வருகிறது.

2024–25ஆம் கல்வியாண்டில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலப்பள்ளிகளில் பயின்ற 16 மாணவர்கள் JEE, NIFT–EE, CUET, CLAT போன்ற நுழைவுத் தேர்வுகளில் தேர்ச்சி பெற்று, முன்னணி உயர்கல்வி நிறுவனங்களான IIT, NIT, NIFT, FDDI (Foot wear Design and Development Institute) போன்ற நிறுவனங்களில் சேர்ந்து சிறந்த முறையில் பயின்று வருகின்றனர்.

ஆதிதிராவிடர் - பழங்குடியினர் மாணவர்களை வாழ்த்திய முதல்வர்!

தமிழ்நாடு அரசின் தொடர் முன்னெடுப்பின் காரணமாக 2025–2026 ஆம் கல்வி ஆண்டில் பல்வேறு உயர்கல்வி நிறுவனங்களுக்கான நுழைவுத்தேர்வுகளில் தேர்வு பெற்று, புகழ்பெற்ற உயர் கல்வி நிறுவனங்களில் சேர்க்கை பெற்ற ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலப் பள்ளிகளைச் சார்ந்த 136 மாணவ, மாணவியர்களுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மடிக்கணினிகள் மற்றும் பாராட்டுச் சான்றிதழ்களை வழங்கி வாழ்த்துத் தெரிவித்தார்.

இந்த நிகழ்ச்சியில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை செயலாளர் திருமதி க.லட்சுமி பிரியா, ஆதிதிராவிடர் நல ஆணையர் த.ஆனந்த், பழங்குடியினர் நல இயக்குநர் எஸ்.அண்ணாதுரை மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

தருமபுரி மேற்கு மாவட்டம், பாப்பிரெட்டிப்பட்டி மெணசி கிராமத்தில் அமைந்துள்ள சமுதாய கூடத்தில் “உங்களுடன் ஸ்டாலின்” நிகழ்ச்சி மெணசி, பூதநத்தம், ஆலாபுரம் ஆகிய ஊராட்சிகளுக்கு நடைபெற்றது. இம்முகாமில் பெறப்பட்ட மனுக்களை பரிசீலனை செய்து பட்டா மாறுதல் உள்ளிட்ட சான்றிதழ்களை மாவட்ட ஆட்சியர் ரெ.சதீஸ் வழங்கினார். உடன் பாப்பிரெட்டிப்பட்டி மேற்கு ஒன்றியச் செயலாளர் பி.எஸ்.சரவணன், மாவட்ட வழங்கல் அலுவலர் செம்மலை, வட்டார வளர்ச்சி அலுவலர்கள் அப்துல்கலாம் ஆசாத், அறிவழகன் மற்றும் அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

மிகவும் பின்தங்கிய குடும்பங்களில் இருந்து மேலெழுந்து புகழ் பெற்றிருக்கும் மாணவர்களின் கல்விப் பயணம்:

நலம் பெற்றுப் பங்கேற்ற எனது முதல் நிகழ்ச்சி மன மகிழ்ச்சியைத் தந்தது!

உயர்கல்வி நிறுவனங்களில் சேர்க்கை பெற்ற – ஆதிதிராவிடர் – பழங்குடியினர் நலப்பள்ளி மாணவ – மாணவியரை வாழ்த்தி முதல்வர் மு.க.ஸ்டாலின் உருக்கம்!

சென்னை, ஆக.2-

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலப் பள்ளிகளில் பயின்று, புகழ்பெற்ற உயர்கல்வி நிறுவனங்களில் சேர்க்கை பெற்ற 136 மாணவ - மாணவியர்களுக்கு மடிக்கணினிகளும் பாராட்டுச் சான்றிதழ்களும் வழங்கிய பின், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளங்களில் வெளியிட்ட பதிவில், “மிகவும் பின்தங்கிய - துன்பங்களை அனுபவித்த குடும்பங்களில் இருந்து மேலெழுந்து புகழ் பெற்றிருக்கும் அவர்களது கல்விப் பயணத்தையும் - கல்வி மீதான அவர்களது பற்றையும் கேட்டு உள்ளம் நெகிழ்ந்து கண்கள் கலங்கினேன்!” என உருக்கமுடன் குறிப்பிட்டுள்ளார்.

முதல்வர் அவர்களின் வலைதளப் பதிவு வருமாறு:-

நலம்பெற்றுப் பங்கேற்ற முதல் நிகழ்ச்சியே மனமகிழ்ச்சி தரும் நிகழ்ச்சியானது!

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலப் பள்ளிகளில் பயின்று, இன்று புகழ்பெற்ற உயர்கல்விநிறுவனங்களில் சேர்க்கை பெற்ற 136 மாணவ - மாணவியர்களுக்கு மடிக்கணினிகளும் பாராட்டுச் சான்றிதழ்களும் வழங்கினேன்.

மிகவும் பின்தங்கிய - துன்பங்களை அனுபவித்த குடும்பங்களில் இருந்து மேலெழுந்து புகழ்பெற்றிருக்கும் அவர்களது கல்விப் பயணத்தையும் - கல்வி மீதான அவர்களது பற்றையும் கேட்டு உள்ளம் நெகிழ்ந்து கண்கள் கலங்கினேன்.

கல்விதான் உண்மையான பெருமையைத் தேடித் தரும் என உயர்படிப்புகளுக்குச் சென்றுள்ள இவர்கள் வாழ்வின் அத்தனை உயரங்களையும் காண வேண்டும் என உள்ளன்போடு வாழ்த்துகிறேன்! இப்படி கல்வியால் - உழைப்பால் முன்னேறிச் சாதனை படைப்பவர்களைத் தான் தமிழ்ச்சமூகம் முன்மாதிரியாக எடுத்துக் கொள்ள வேண்டும்!

இவ்வாறு அப்பதிவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ்நாடு

மாநில வாணிபக் கழகத்தில் - 40 நபர்களுக்கு பணி நியமன ஆணைகள்!

முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

சென்னை, ஆக.2 -

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (31.7.2025) தலைமைச் செயலகத்தில், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை சார்பில் தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தில் தட்டச்சர் உள்ளிட்ட பணியிடங்களுக்கு தெரிவு செய்யப்பட்ட 40 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார்.

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலம், தட்டச்சர் பணியிடங்களுக்கு 9.6.2024 அன்று தேர்வு நடத்தப்பட்டு, தெரிவு செய்யப்பட்ட 39 நபர்களுக்கு தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தில் பணி நியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நேற்றைய தினம் 5 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார்.

இப்புதிய தட்டச்சர்கள் தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தின் கீழ் தமிழகமெங்குமுள்ள மாவட்ட மேலாளர் அலுவலகங்களிலும், முதுநிலை மண்டல மேலாளர் அலுவலகங்களிலும் மற்றும் தமிழ்நாடு மாநில வாணிபக் கழக தலைமை அலுவலகத்திலும் பணிபுரிவர்.

கருணை அடிப்படையில் பணிநியமன ஆணை வழங்குதல்

சிவகங்கை மாவட்டம், காரைக்குடி வட்டம், பள்ளத்தூரில் மதுபான சில்லறை விற்பனைக் கடையில் மார்ச் 2023ஆம் ஆண்டு நடந்த பெட்ரோல் குண்டு வீச்சு சம்பவத்தில் பணியிலிருந்த விற்பனையாளர் அர்ஜுனன் என்பவர் பலத்த தீக்காயமுற்று மரணமடைந்தார்.

அர்ஜுனன் அவர்களின் மறைவிற்கு முதலமைச்சர் அவர்களால் இரங்கல் தெரிவிக்கப்பட்டு, அவரது குடும்பத்தினருக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து 10 லட்சம் ரூபாய் வழங்கப்பட்டது.

மேலும், அவரது குடும்பத்தில் ஒருவருக்கு அரசு வேலை வழங்கப்படும் என்று அறிவித்ததற்கிணங்க, மறைந்த அர்ஜுனன் அவர்களின் மனைவி திருமதி கிருஷ்ணவேணிக்கு தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தில் கருணை அடிப்படையில் காலமுறை ஊதியத்தில் தூய்மைப் பணியாளர் பணி யிடத்திற்கான பணி நியமன ஆணையினை முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.

இந்த நிகழ்ச்சியில், நீர்வளம் மற்றும் சட்டத்துறை அமைச்சர் துரைமுருகன், இயற்கை வளங்கள் துறை அமைச்சர் எஸ். இரகுபதி, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் சு. முத்துசாமி, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் தீரஜ் குமார், தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தின் மேலாண்மை இயக்குநர் டாக்டர் எஸ்.விசாகன், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை இயக்குநர் திருமதி. சீமா அகர்வால், காவல்துறை இயக்குநர் (தலைமையிடம்) வினீத் தேவ் வான்கடே, தமிழ்நாடு காவலர் வீட்டு வசதி கழகத்தின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் சைலேஷ் குமார் யாதவ், சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறை தலைமை இயக்குநர் முனைவர் மகேஷ்வர் தயாள், தாம்பரம் காவல் ஆணையர் அபின் தினேஷ் மோதக், சென்னை மாநகர காவல் ஆணையர் ஆ. அருண், தடய அறிவியல் துறை இயக்குநர் முனைவர் சிவப்பிரியா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

தடயவியல் திறன்களை நவீனமாக்க கூடுதல் நிதி ஒதுக்குவீர்!

மக்களவையில் – டி.எம்.கதிர் ஆனந்த் வலியுறுத்தல்!

புதுடெல்லி, ஆக. 2 –

பல்வேறு மாநிலங்களில் CCTNS திட்டத்தை மேம்படுத்துவதற்கும் தடயவியல் திறன்களை நவீனமயமாக்குவதற்கும் ஒன்றிய அரசு செய்த நிதி ஒதுக்கீடு குறித்து நாடாளுமன்ற மக்களவையில் கதிர் ஆனந்த் எம்.பி. கேள்வி எழுப்பினார்.

நாட்டில் பல்வேறு மாநிலங்களில் CCTNS திட்டத்தை மேம்படுத்துவதற்கும் தடயவியல் திறன்களை நவீனமயமாக்குவதற்கும் ஒன்றிய அரசு தனது நிதி ஒதுக்கீட்டை அதிகரித்துள்ளதா? அப்படியானால் கடந்த பத்து ஆண்டுகளில் மாநில வாரியாக ஒதுக்கப்பட்ட நிதியின் விவரங்கள் தருக?

மாநில காவல் படைகளை நவீனமயமாக்குவதற்கு ஒன்றிய அரசு நிதியை அங்கீகரித்துள்ளது என்றாலும் கடந்த மூன்று ஆண்டுகளில் மிகக் குறைந்த தொகையையே செலவிட்டுள்ளது என்பது உண்மையா?

அப்படியானால் அதன் விவரங்கள் மற்றும் அதற்கான காரணங்கள்?

இதற்கு உள்துறை அமைச்சகத்தில் ராஜாங்க அமைச்சர் பண்டி சஞ்சய் குமார் எழுத்து பூர்வமாக அளித்த பதில் வருமாறு :–

குற்றம் மற்றும் குற்றவாளிகள் தொடர்பான தரவுகளை சேகரித்தல் புதுப்பித்தல் மற்றும் பகுப்பாய்வு செய்தல் ஆகியவற்றை குற்றம் மற்றும் குற்றவாளிகள் கண்காணிப்பு வலையமைப்பு மற்றும் அமைப்புகள் (CCTNS) எளிதாக்குகிறது. CCTNS திட்டத்தின் செயல்படுத்தல் மார்ச் 31 2018 அன்று நிறைவடைந்தது.

மேலும் இடைச்செயலாக்க குற்றவியல் நீதி அமைப்பு 2.0 (ICJS 2.0) திட்டத்தின் கீழ் உள்துறை அமைச்சகம் அனைத்து மாநிலங்கள்/யூனியன் பிரதேசங்களுக்கும் ஐடி உள்கட்டமைப்பை மேம்படுத்துதல் நெட்வொர்க் இணைப்பு விழிப்பு ணர்வை உருவாக்குதல் மற்றும் தடயவியல் காவல்துறை சிறைச்சாலை மற்றும் திறன் மேம்பாட்டிற்காக நிதியை ஒதுக்கியுள்ளது.

மாநிலங்கள்/யூனியன் பிரதேசங்களின் வழக்குத் தொடுப்புப் பிரிவுகள். ICJS 2.0 திட்டத்தை செயல்படுத்துவதற்கான நோடல் ஏஜென்சி NCRB ஆகும். மாநிலங்கள்/யூனியன் பிரதேசங்களுக்கு அங்கீகரிக்கப்பட்ட நிதியின் விவரங்கள் இணைப்பு–1 இல் கொடுக்கப்பட்டுள்ளன.

2021–22 முதல் 2025–2026 வரையிலான காலத்திற்கு ரூ.2080.5 கோடி மொத்த நிதி ஒதுக்கீட்டில் தடயவியல் திறன்களை நவீனமயமாக்குவதற்கான திட்டம் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு மாநிலத்திற்கு இதற்காக 128 கோடியே 17 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தின் கீழ் மொபைல் தடயவியல் வேன்கள் உள்ளிட்ட இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களை நவீனமயமாக்குவதற்கும் நாட்டில் தடயவியல் அறிவியலுக்கான கல்வி வசதிகளை விரிவுபடுத்துவதன் மூலம் இந்த ஆய்வகங்களில் பயிற்சி பெற்ற மனிதவளம் கிடைப்பதை எளிதாக்குவதற்கும் உயர்தர தடயவியல் அறிவியல் வசதிகளை உருவாக்க பல மாநிலங்கள்/யூனியன் பிரதேசங்களுக்கு உதவி கிடைக்கிறது.

இதன்படி தமிழ்நாடு மாநிலத்திற்கு மொபைல் தடவயியல் வேன்களுக்காக ரூ. 36.04 கோடிகளும் உயர்தர தடயவியல் அறிவியல் வசதிகளை உருவாக்க ரூ. 22.2 கோடிகளும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மேற்கூறியவற்றைத் தவிர மாநில தடயவியல் அறிவியல் ஆய்வகங்களில் டிஎன்ஏ பகுப்பாய்வு மற்றும் சைபர் தடயவியல் திறன்களை வலுப்படுத்துவதற்கான நிர்பயா நிதியுதவி திட்டத்தின் கீழ் 30 மாநிலங்கள்/யூனியன் பிரதேசங்களின் 245.29 கோடி ரூபாய்க்கு திட்டங்கள் அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

இதன்படி தமிழ் நாட்டிற்கு ரூ. 4 கோடியே 87 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறு அமைச்சர் தனது பதிலில் கூறியுள்ளார்.